LIFE+



# வாழ்க்கையை நம்பிக்கையோடு வாழுங்கள்

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

## வாழ்க்கையின் கட்டங்கள்



1

இளம் தனிநபர்



2

திருமணமானவர்



3

அழகான குடும்பம்



4

பணியிலிருந்து ஓய்வு பெற முன்னர்.



5


ஓய்வூதியம் பெறுபவர்

“வாழ்க்கை என்பது விறுவிறுப்பானது! வாழ்க்கையில்
எந்தக் கட்டத்தில் நீங்கள் இருந்தாலும்,
எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பங்கள் நிறைந்திருக்கும்.
இந்த வாழ்க்கைப் பயணத்தில்,
ஸ்மார்ட்டான நிதித் திட்டத்தினூடாக உங்களுக்காகவும்,
உங்கள் அன்புக்குரியவர்களுக்காகவும் நீங்கள் கொண்டிருக்கும்
கனவுகளுக்கு நிதிசார் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.”

## உங்களுக்கு தெரியுமா? சராசரியாக,




83% ஆன அரச வைத்தியசாலை மரணங்கள்
தொற்றா நோய்களினால் நிகழ்கின்றன



2019 இல் 31,000+ க்கு அதிகமான நபர்கள்
புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டிருந்தது

ஆதாரம் - வருடாந்த சுகாதார அறிக்கை, சுகாதார அமைப்பு (2019)

**எதிர்பாராத தருணங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றக் கூடும்,
ஆதலால் உங்களின் அன்புக்குரியவர்களை பற்றி சிந்தித்துள்ளீர்களா?**

## உங்களுக்கு ஏன் LIFE + அவசியம்



பரிபூரண பாதுகாப்பை வழங்குவதற்கு



தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் நிதியம்

## LIFE + என்றால் என்ன?



எந்நேரத்திலும் துன்பத்துக்கு முகங்கொடுக்க தயாராக இருக்க வேண்டியது முக்கியமானதாகும். உங்கள் குடும்பத்துக்கு பாதுகாப்பான மற்றும் நிதியளவில் உறுதியான எதிர்காலத்தை ஏற்படுத்துவது முக்கியமானதாகும். இன்றைய தினம் நீங்கள் மேற்கொள்ளும் முதலீடுகளுக்கு உயர் வருமானத்தையும், பரிபூரண பாதுகாப்பையும் வழங்கும் இணைந்த அனுகூலங்களைக் கொண்ட தீர்வை மதிநுட்பமாகத் தெரிவு செய்வது சிறந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும் Life+ இனால் உங்களின் அன்புக்குரியவர்களுக்கு பரிபூரண பாதுகாப்புடன், உங்களின் எதிர்காலக் கனவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, உங்களின் முதலீட்டுக்கு உயர்ந்த வருமானமும் வழங்கப்படுகின்றது!

## LIFE+ இன் பிரத்தியேகமான உள்ளம்சங்கள்

### பரிபூரண பாதுகாப்பு

எதிர்பாராத விதமாக உயிரிழப்பு ஏற்பட்டால், உங்கள் அன்புக்குரியவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அடிப்படை காப்பீடு தொகை அல்லது முதலீட்டு கணக்கின் மீதி இவற்றில் உயர்வான தொகை நிதிக்கொடுப்பனவாக வழங்கப்படும். உங்களின் தேவைகளுக்கு ஏற்ப வகையில், மேலதிக காப்பீடுகளை உள்ளடக்கி, உங்கள் காப்புறுதி திட்டத்தை மாற்றியமைத்து கொள்ள முடியும்.





### லோயல்டி போனஸ்

காப்புறுதி தவணைக் காலத்துக்கான சகல கட்டுப்பணக் கொடுப்பனவுகளும், திட்டம் முதிர்ச்சியடையும் போது செலுத்தப்பட்டிருந்தால், உங்கள் நம்பிக்கைக்கான வெகுமதியாக 10% மேலதிக போனஸ் கொடுப்பனவாக உங்களுக்கு செலுத்தப்பட்டு, உங்கள் முதலீட்டின் மீது நீங்கள் உச்ச வருமானத்தைப் பெற்றுக் கொள்வது உறுதி செய்யப்படும்.

# தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் நிதியம்

யூனியன் அஷ்யூரன்ஸினால் சந்தையில் பிரகடனம் செய்யப்படும் சிறந்த வருடாந்த பங்கிலாப வீதங்களுடன், உங்கள் நிதியம் ஒவ்வொரு மாதமும் வளர்ச்சியடையும்.



| ஆண்டு | ஆண்டுக்கான இடைக்கால பங்கிலாப வீதம் | பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாப வீதம் |
|---|---|---|
| 2015 | 8.00% | 9.50% |
| 2016 | 8.00% | 10.50% |
| 2017 | 10.00% | 10.25% |
| 2018 | 10.00% | 10.00% |
| 2019 | 10.00% | 10.00% |
| 2020 | 9.00% | 9.00% |
| 2021 | 8.00% | 8.00% |
| 2022 | 9.00% | 10.00% |
| 2023 | 9.00% | 13.50% |

*மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதன்படி, ஆண்டின் தொடக்கத்தில் அறிவிக்கப்படும் இடைக்கால பங்குலாப விகிதம். அந்த ஆண்டு முழுவதும் தனிநபர் நிதியில் மாதந்தோறும் வரவு வைக்கப்படும். வரவு வைக்கப்படும் பங்குலாப உண்மையான விகிதமானது ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும் தீர்மானிக்கப்படும், இதில் சர்வதேச ஆயுள் நிதியத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு வினைத்திறன் பெறுபேறுகள் தாக்கம் செலுத்துகின்ற போதிலும், ஆண்டுக்கான இடைக்கால விகிதத்தை விட குறைவானதாக அமைந்திருக்காது.



## காப்புறுதி தகவல்கள்

10 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரை இந்தக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.



ஆகக்குறைந்த பிரவேச வயது 18 வருடங்கள்



ஆகக்கூடிய பிரவேச வயது 65 வருடங்கள்

## நிதிய விளக்கங்கள்

உங்களுக்கு வயது 30 ஆயின், நீங்கள் 15 அல்லது 20 வருடங்களுக்காக, உங்களின் அன்புக்குரியவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக Life+ காப்புறுதியைப் பெற்றுக் கொண்டால்.

| வயது | காலம் | ஆயுள் காப்பீடு | வருடாந்த கட்டுப்பணம் | 8% பங்கிலாப அடிப்படையில் விளக்கப்பட்ட முதிர்வுப் பெறுமதி | 10% பங்கிலாப அடிப்படையில் விளக்கப்பட்ட முதிர்வுப் பெறுமதி | 12% பங்கிலாப அடிப்படையில் விளக்கப்பட்ட முதிர்வுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| 30 | 15 | 2,400,000 | 120,050 | 2,870,000 | 3,353,000 | 3,924,000 |
| 30 | 20 | 1,500,000 | 60,050 | 2,384,000 | 2,969,000 | 3,711,000 |



# LIFE + உடன் மேம்படுத்தப்பட்ட அனுகூலங்கள்

பரிபூரண பாதுகாப்புக்காக கீழே தரப்பட்டுள்ள காப்பீடுகளை சேர்த்துக் கொள்ளலாம்

## சுகாதார காப்பீடுகள்

| | |
|---|---|
| யூனியன் Health 360 (H360) | உங்களின் சகல மருத்துவக் காப்பீட்டுத் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் சிறந்த சுகாதாரக் காப்பீடு தற்போது அறிமுகமாகியுள்ளது. ஹெல்த் 360 என்பது, உங்கள் குடும்பத்துக்கான பரிபூரண சுகாதாரக் காப்புறுதித் தீர்வாக, உங்கள் ஆயுள் காப்புறுதியில் இணைத்துக் கொள்ளக்கூடிய சுகாதாரக் காப்பீடாகும். |
| யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் ப்ரீமியர் (USHP) | ஆயுள் காப்புறுதிதாரரின் மருத்துவச் செலவுகளை மீளவழங்கும். ஆயுள் காப்புறுதிதாரரின் பெற்றோர்கள், வாழ்க்கைத்துணை மற்றும் 23 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இலங்கையினுள் அல்லது உலகளாவிய ரீதியில் (ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா தவிர்ந்த) பெருமளவு மேலதிக அனுகூலங்களுடன் காப்பீட்டைப் பெறலாம் |
| வைத்தியசாலை பண அனுகூலம் (HCB) | வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதால் தினசரி வருமான இழப்பு செலுத்தப்படும். |
| சுவமக அனுகூலம் (SMB) | பாரதூரமான நோய்நிலை அல்லது சத்திரசிகிச்சையின் போது மருத்துவ சிகிச்சைக்கு அவசியமான நிதி உதவியை வழங்குவதுடன், பாரிய தொகை கொடுப்பனவை மீள வழங்கும். |
| பரிபூரண சத்திரசிகிச்சை அனுகூலம் (CSB) | விபத்தினால் அல்லது ஒரு நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காகவோ சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டால் உடனடியாக ஒரு தொகை செலுத்தப்படும் |
| சிறுவர் சுகாதார அனுகூலம் (CHB) | தினசரி பண அனுகூலத்தை வழங்குவதுடன் சிறுவர்களில் மேற்கொள்ளப்படும் 244 சத்திரசிகிச்சைகளை உள்ளடக்கியது |

## அங்கவீன காப்பீடுகள்

| | |
|---|---|
| விபத்து அல்லது சுகயீனம் காரணமான முழுமையான மற்றும் நிரந்தர அனுகூலம் (TPS) | காப்புறுதி காலப்பகுதியில் விபத்துகள் அல்லது சுகயீனம் காரணமாக எழும் முழுமையான நிரந்தர அங்கவீனங்களுக்காக காப்பீட்டுத் தொகை 5 சமமான வருடாந்த தவணைக் கட்டணங்களில் செலுத்தப்படும் |
| விபத்தினால் மாத்திரம் ஏற்படும் முழுமையான மற்றும் நிரந்தர அனுகூலம் (TPA) | காப்புறுதி காலப்பகுதியில் விபத்தால் எழும் முழுமையான நிரந்தர அங்கவீனங்களுக்காக காப்பீட்டுத் தொகை 5 சமமான வருடாந்த தவணைக் கட்டணங்களில் செலுத்தப்படும் |
| நீடிக்கப்பட்ட பகுதியளவு அங்கவீனம் (EPD) | காப்புறுதி காலப்பகுதியில் விபத்தால் எழும் பகுதியளவு நிரந்தர அங்கவீனங்களுக்காக காப்பீட்டுத் தொகையின் குறிப்பிட்ட சதவீதம் செலுத்தப்படும் |

## மேலதிக ஆயுள் காப்பீடுகள்

| | |
|---|---|
| நிலை தவணை அனுகூலம் (LTB) | சிறிதளவு மேலதிக முதலீட்டில் உங்கள் காப்பீட்டுத் தொகையை 10 மடங்கினால் அதிகரித்து உங்கள் ஆயுள் காப்பீட்டை அதிகரித்து கொள்ளலாம். |
| விபத்துசார் மரண அனுகூலம் (ADB) | விபத்தினால் மரணம் சம்பவித்தால் அடிப்படை ஆயுள் காப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக மொத்தத் தொகை செலுத்தப்படும் |
| வாழ்க்கைத் துணைக்கான அனுகூலம் (SPB) | வாழ்க்கைத் துணையின் உயிரிழப்பின் போது ஒரு மொத்த தொகை செலுத்துவதன் மூலம் நிதி சார் பாதுகாப்பை வழங்குகிறது |
| மரணச் சடங்கு அனுகூலம் (FEB) | காப்புறுதிதாரரின் உயிரிழப்பின் போது மரணச் சடங்குக்கான செலவீனத்தை ஈடு செய்யும் |

## வருமான இழப்புக்கான காப்பீடுகள்

| | |
|---|---|
| **குடும்ப வருமான அனுகூலம் (FIB)** | குடும்பத்தின் பிரதான வருமானமீட்டுபவர் உயிரிழந்தால், காப்புறுதித் தவணை நிறைவடையும் வரை குடும்ப அங்கத்தவர்களின் நிதிச் சுமையை தணிக்கும் வகையில், காலாண்டு அடிப்படையில் மொத்தத் தொகை வழங்கப்படும் |
| **கட்டுப்பண விலக்கழிப்பு (WP)** | முழுமையான நிரந்தர அங்கவீனத்தின் போது எதிர்காலத்தில் முதிர்வின் போது கிடைக்கவேண்டிய அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், கட்டுப்பணம் விலக்கழிக்கப்பட்டு, பங்கிலாபங்கள் சேர்க்கப்படும் |

இந்தக் கையேடு தகவல் வழங்குவதற்காக மாத்திரமே என்பதுடன் இது ஒரு ஒப்பந்தம் அல்லது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தமல்ல. அனுகூலங்கள், தவிர்ப்புகள், நிதியங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு காப்புறுதி ஆவணத்தை பார்க்கவும். காப்புறுதி ஆரம்பிக்கும் போதான அசல் வயது மற்றும் பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாபம் போன்றவற்றின் அடிப்படையில் விளக்கப்பட்ட பெறுமதிகள் மாறுபடும்.






யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி (PQ 12)
இல. 20, சென் மைக்கல்ஸ் வீதி,
கொழும்பு 03, இலங்கை.

1330 (24x7 ஹொட்லைன்)
+94 11 2990 990

unionassurance.com

info@unionassurance.com

எம்மை கண்டறியுங்கள்

யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சியினால் (PQ12) வழங்கப்பட்டுள்ளது 03/2024